சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.02.12.2025.
OS.No. 151/2020
Dw1 : காசிநாதன் (வயது 49 ) த/பெ. கந்தசாமி
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**வாதிகள் தரப்பு கு.வி**

எனது அப்பா கந்தசாமியின் அப்பா பெயர் குஞ்சு (எ) குமரசாமி. எனது தாத்தா குஞ்சு ( எ) குமரசாமியின் தகப்பனார் பெயர் தீராவினையுடையார் என்று சொல்வார்கள். மேற்படி தீராவினையுடையாரின் அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம். நான் 9 ஆம் வகுப்பு படித்திருக்கிறேன். எனது மனைவி பெயர் வனரோஜா.

தாவா சொத்து ஆதீயில் யாருக்கு பாத்தியப்பட்ட என்றால் வடமலை (எ) நடேச உடையார் என்பவருக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்து எத்தனை பிரிவுகளாக உள்ளது என்றால் 3 பிரிவுகளாக உள்ளது. மேற்படி 3 பிரிவுகளின் விஸ்தீரணங்கள் தனி தனியாக தெரியும் . அது முறையே 118/2 ல் 19 சென்ட்டும், 118/3 ல் 21 சென்டும், 117/4 பி 13 ல் எங்களது பூர்வீக சொத்தும் வடமலை (எ) நடேச உடையாரின் பூர்வீக சொத்தும் சேர்ந்து 13 சென்டில் 5 சென்ட் வடமலை (எ) நடேச உடையாருக்கு பாத்தியமானது.

மேற்படி 3 அயிட்டமாக உள்ள தாவா சொத்தில் சர்வே எண்.118/2 க்கான நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும் கிழக்கே மணி உடையார், தனபால் இடமும், மேற்கே 117 க்கு கட்டுப்பட்ட எனது நிலமும், வடக்கே 118/1 சி என்ற பொது பாத்தியப்பட்ட நிலமும், தெற்கே 118/4, 12 ல் உள்ள எனது நிலமும் உள்ளது.

சர்வே எண்.118/1 சி என்பது பொது பாத்தியமானது என்று கூறியுள்ளேன் என்றும் யார் யார் பொது பாத்தியமானது என்றால் வடமலை (எ) நடேசன், எனது தகப்பனார் கு.கந்தசாமி மற்றும் 8 நபர்களுக்கு பாத்தியமானது. மேற்படி 10 நபர்களின் பெயர்கள் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியும். மாணிக்க உடையார், ஆறுமுகம், கந்தசாமி, சின்னதுரை, ராமசாமி, வீரமணி, மணி,

கு.கந்தசாமி, குணசேகரன், வடமலை (எ) நடேசன் ஆகியோர்களுக்கு கூட்டாக பாத்தியமானது.

மேற்படி நான் கூறிய சர்வே எண்களுக்கு தனி தனி பட்டாக்கள் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி தனி தனி பட்டாக்கள் யார் யார் பெயரில் உள்ளது என்றால் நான் வாங்கிய சொத்திற்கு தனி பட்டா உள்ளது. நான் வாங்கிய சொத்து யாரிடமிருந்து கிரயமாக வாங்கியது என்றால் சுப்பிரமணி என்கிற குணசேகரன். நான் வாங்கிய சொத்திற்கு வரி செலுத்தியுள்ளேன். அந்த வரி ரசீதை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

தாவா 2 வது அயிட்ட சொத்து 118/3 க்கு நான்கெல்லைகள் என்ன என்றால் வடக்கே 118/1 சி ஆன பொது நிலம், தெற்கே 118/8,12 ஆன எனது நிலமும், மேற்கே 117 ல் கட்டுப்பட்ட எனது நிலமும், கிழக்கே 118/5,6 ஏ மணி, தனபால் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட நிலமும் உள்ளது. மேற்சொன்ன 118/3 க்கு பட்டா எனது பெயரில் உள்ளது. அதன் பட்டா எண்.330 என்று நினைக்கிறேன்.

தாவா 3 ஆம் அயிட்ட சொத்து சர்வே எண்.117/4 பி13 க்கான நான்கெல்லை என்ன என்றால் கந்தசாமி நிலத்திற்கு கிழக்கு, கணேசன் உடையார் நிலத்திற்கு மேற்கு, எனது நிலத்திற்கு தெற்கு, குணசேகரன் நிலத்திற்கு வடக்கு. சர்வே எண்.117/4 பி13 க்கு எனது பெயரில் பட்டா உள்ளது. பட்டா எண்.2625 என்று நினைக்கிறேன்.

தாவா சொத்துக்களை பொறுத்து பெயர் மாறுதலுக்கான செயல்முறை நடவடிக்கைகள் தாசில்தார் அலுவலகத்தில் நடந்ததா என்றால் 118/2,3 புலங்களுக்கு நடக்கவில்லை. அதற்கான ஆர்டிஓ நடவடிக்கைகள் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன என்றால் ஆர்டிஓ நடவடிக்கையின் மீது டிஆர்ஓ விடம் மேல்முறையீடு செய்துள்ளேன் என்பதால் அந்த ஆவணம் என்னிடம் இல்லை.

ஆர்டிஓ உத்தரவு எந்த வருடம் போடப்பட்டது என்றால் 2022 என்று நினைக்கிறேன். ஆர்டிஓ உத்தரவின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் அதன்

விவரங்களை நான் சரியாக படிக்கவில்லை. யார் சொல்லி உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் ஆர்டிஓ விடம் முறையிட்டபோது, தீர்ப்பு சரியில்லை என்றால் மேல்முறையீடு செய்து கொள்ளுங்கள் என்று சொன்னதால் மேல்முறையீடு செய்தேன்.

ஆர்டிஓ உத்தரவு பற்றி எனக்கு விளக்கம் சொன்னது யார் என்றால் நானே படித்து தெரிந்து கொண்டேன். எனது அப்பா பெயரை கூட்டு பட்டாவிலிருந்து நீக்கியதாக உத்தரவில் இருந்தது, அதனால் நான் மேல்முறையீடு செய்தேன். மேல்முறையீடு செய்வதற்கு முன்பு வழக்கறிஞரிடம் அது குறித்து ஆலோசனை செய்தேனா என்றால் இல்லை.

மேல்முறையீடு செய்யுமாறு ஆர்டிஓ என்னிடம் நேரடியாக சொன்னாரா என்றால் நான் படித்து பார்த்தபோது, உத்தரவில் மேல்முறையீடு செய்து கொள்ளலாம் என்று இருந்தது. நான் நேரடியாக ஆர்டிஓ விடம் முறையிட்டபோதும் அவர் மேல்முறையீடு செய்து கொள்ளலாம் என்று சொன்னார். மேல் முறையீடு மனுவை வழக்கறிஞருடன் சேர்ந்து தான் தயாரித்தேன்.

**குறு.வி தொடர்ச்சி** - வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
காசிநாதன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.12.02 18:03:34 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி